புதுச்சேரி அரசு

துணைநிலை ஆளுநர் செயலகம்

**No. LGS/PRO/2023** **06 மார்ச் 2023**

## <u>பத்திரிகை செய்தி</u>

மக்கள் மருந்தக வார விழாவை ஒட்டி, புதுச்சேரி, ஜிப்மர் மருத்துவமனையில் இன்று(06-03-2023) நடைபெற்ற மக்கள் மருந்தக விழிப்புணர்வு கருத்தரங்கத்தை மாண்புமிகு துணைநிலை ஆளுநர் டாக்டர். தமிழிசை சௌந்தரராஜன் தொடங்கி வைத்தார். ஜிப்மர் மருத்துவமனை இயக்குநர் டாக்டர். ராகேஷ் அகர்வால், மருத்துவ கண்காணிப்பாளர் டாக்டர். துரைராஜன், அதிகாரிகள், மருந்தியியல் துறை பேராசிரியர்கள், மாணவர்கள் கருத்தரங்கில் கலந்து கொண்டனர். கருத்தரங்கில், மக்கள் மருந்தகம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையிலான விளக்கப்படங்கள் திரையிடப்பட்டன. கருத்தரங்கை தொடங்கி வைத்து பேசிய துணைநிலை ஆளுநர் உரையின் சுருக்கம்.

- பொதுவாக மருத்துவர்கள் மருந்து சீட்டு எழுதும்போது அதன் விலை பற்றி கவலைப்படாமல் எழுதிக் கொடுத்து விடுகிறார்கள். ஒரு மருத்துவராக நாம் நோயாளிகளின் மீதும் அவர்களுக்கு பரிந்துரைக்கும் மருந்துகளின் விலை பற்றியும் கவனம் செலுத்த வேண்டி இருக்கிறது.
- நோயாளிகளுக்கு மருந்து சீட்டு எழுதும்போது அந்த மருந்துகளை நோயாளிகளால் வாங்க முடியுமா என்பதை மருத்துவர்கள் கவனத்தில் கொள்வது நல்லது. அத்தகைய சூழ்நிலைகளில் மக்கள் மருந்தகங்களுக்கு போக அவர்களுக்கு வழி காட்ட வேண்டும்.
- மருந்துகள் நோயாளிகளின் மனதில் மிகப் பெரிய தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. அதிலும் மருந்துகளின் விலை நோயாளிகளின் கவலைப்படுத்துகிறது. மருந்துகள் விலை அதிகமாக இருந்தால் மருந்துகள் எடுக்க வேண்டிய கால அளவை குறைத்துக் கொள்கிறார்கள். நான்கு நாட்களுக்கு பதிலாக ஒரு நாளைக்கு கொடுங்கள் என்று கேட்கிறார்கள்.
- மக்களுக்கு குறைந்த விலையில் மருந்துகளை வழங்குவது பற்றி சிந்தனை செய்த பாரதப் பிரதமரை நாம் போற்றியாக வேண்டும். தரமான மருந்துகள் மிகக் குறைந்த விலையில் மக்கள் மருந்தங்களில் கிடைக்கிறது. மருந்துகள் சுமார் 90% குறைந்த விலையில் கிடைக்கிறது. சத்துமாவு, இன்னும் சில மருந்து பொருட்கள் 50% விலை குறைவாக கிடைக்கிறது.